


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஜூலை. 05, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 271 ❖ ரூ.10

### தமிழக பல்கலை.களில் அதிக எண்ணிக்கையில் காலிப் பணியிடங்கள்

# ஆளுநர் அதிருப்தி

## துணைவேந்தர்கள் இல்லாததால் பல்கலைகழகங்களின் செயல்பாடுகள் முடங்கியுள்ளது, தொழிற்சாலைகளுடன் இணைந்து வேலை வாய்ப்பினை உறுதி செய்ய வேண்டும்: ஆர்.என்.ரவி



**சென்னை , ஜூலை. 5-**

**தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் அதிக எண்ணிக்கையில் காலியாக இருக்கிறது என்று தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி அதிருப்தி தெரிவித்துள்ளார்.**

தமிழக ஆளுநரும், பல்கலைக்கழகங்களின் வேந்தருமான ஆர்.என்.ரவி தலைமையில் நேற்று சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில், அனைத்து பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள்மற்றும்செனட் மற்றும் சிண்டிகேட்களில் ஆளுநரின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டவர்கள் உடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர், ஆளுநர் அறிக்கை ஒன்றை வெளியிடப்பட்டுள்ளார். அதில், "பல்கலைக்கழகங்களில் வெளிப்படைத் தன்மையுடன் பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டிய சிண்டிகேட் மற்றும் செனட் கூட்டங்கள் தலைமைச் செயலகத்தில்தான் நடைபெறுகின்றன. துறையின் முதன்மைச் செயலாளர் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் இந்தக் கூட்டங்களில் பங்கேற்காமல், தலைமைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் நடத்தப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் அதிக எண்ணிக்கையில் காலியாக இருக்கின்றன. நேர்மையான முறையில் இந்தகாலிப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். மேலும், பல பல்கலைக்கழகங்களில் பதிவாளர் பணியிடங்களும், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் பணியிடங்களும் காலியாக இருக்கின்றன. இந்தப் பதவிகள் அனைத்தும் கூடுதல் பொறுப்பு என்ற பெயரில் பல ஆண்டுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பல பல்கலைக் கழகங்களில் துணைவேந்தர்கள் இல்லாததால் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் முற்றிலுமாக முடங்கியுள்ளன. தற்போதைய சூழல் மற்றும் தேவைக்கேற்ப புதியபாடத்திட்டங்களை கொண்டுவர வேண்டும் என்று உறுப்பினர்கள் பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

எனவே,பல்கலைக்கழக மானியக்குழுவின் விதிகளுக்குட்பட்டு உடனடியாக இதை செய்ய வேண்டும். பல்கலைக்கழகங்கள், தொழிற்சாலைகளுடன் இணைந்து மாணவர்களுக்கான வேலைவாய்ப்பினை உறுதி செய்ய வேண்டும் என்ற கருத்தும் இந்தக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இது மாணவர்களை வருங்காலத்தில் தொழில் முனைவோர்களாகமாற்ற உதவும்" என்று அவர் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சி, கொல்லங்காட்டில், புதிய மின்மாற்றியினை, சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, செயற்பொறியாளர் ஆனந்தாய், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் குழந்தைசாமி, பொன்னமராவதி ஒன்றியக் குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## செந்தில் பாலாஜி மனைவி தொடர்ந்த வழக்கில் நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு: வழக்கு மூன்றாவது நீதிபதிக்கு மாற்றம்



**சென்னை, ஜூலை. 5-**

**தனது கணவர் செந்தில் பாலாஜியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக்கோரி அவரது மனைவி எஸ்.மேகலா, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுமீது நீதிபதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு வழங்கியுள்ளனர். இதனால் வழக்கு மூன்றாவது நீதிபதி யார் என்பதை தேர்வு செய்ய தலைமை நீதிபதி அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது.**

சட்டவிரோதபணப்பரிமாற்ற தடைச்சட்டத்தின் கீழ் அமைச்சர்செந்தில்பாலாஜியை அமலாக்கத்துறையினர் கடந்த ஜூன் 14 அன்று கைது செய்தனர். அப்போது அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால், சென்னை ஓமந்தூரார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், உயர்நீதிமன்ற உத்தரவுபடி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு அங்குஇதயஅறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்ட உடன், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக்கோரி அவரது மனைவி எஸ்.மேகலா, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு, நீதிபதிகள் ஜெ.நிஷா பானு, டி.பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரிக்கப்பட்டது.

இந்த வழக்கில் இருதரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் நீதிபதிகள் நேற்று தீர்ப்பு வழங்கினர். முதலில் நீதிபதி நிஷா பானு தனது தீர்ப்பினை வாசித்தார். அப்போது அவர், "இந்த மனு விசாரணைக்கு உகந்ததுதான். மனு ஏற்கப்படுகிறது. செந்தில் பாலாஜியின் கைது சட்டவிரோதம். அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்" என்று தீர்ப்பளித்தார்.

நீதிபதி பரத சக்கரவர்த்தி தனது தீர்ப்பில், சிகிச்சை முடிந்து குணம் அடைந்தபின் செந்தில் பாலாஜியை சிறையில் அடைக்கவேண்டும் என்று கூறி, மனுவினைத் தள்ளுபடி செய்தார். இரு நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு வழங்கியுள்ளதால், வழக்கு வேறு ஒரு அமர்வுக்கு மாற்றப்பட இருக்கிறது. மூன்றாவது நீதிபதி யார் என்பதைத் தீர்மானிக்க வழக்கு தலைமை நீதிபதி அமர்வுக்கு மாற்றப்பட்டுள்ளது. தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜூலை 12ம் தேதி வரை நீதிமன்றக்காவல் நீட்டிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கிரமங்கலம் அருகே பனங்குளம் ஸ்ரீ பிடாரி அம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் : அமைச்சர் மெய்யநாதன் பங்கேற்பு



*அறந்தங்கி, ஜூலை.5-*

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம் அருகே பனங்குளம் கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ பிடாரிஅம்மன் ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அப்பகுதி கிராம மக்களால் முடிவு செய்யப்பட்டது, இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 1ஆம் தேதி கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது.

அதனை தொடர்ந்து 2 நாட்களாக மூன்று கால யாகபூஜை நடைபெற்று வந்தது, விழாவின் முக்கிய நிகழ்வான நேற்று நான்காம் கால யாக பூஜை முடிவுற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது. கடம் புறப்பாடானது கோவிலை சுற்றி வலம் வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது, அதனை தொடர்ந்து சிவஸ்ரீ நடராஜ ரவிசங்கர சிவம் தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தார் தொடர்ந்து கோவிலில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த அன்னதான நிகழ்சியை அமைச்சர் மெய்யநாதன் தொடங்கி வைத்தார்.

கும்பாபிஷேகத்தை காண திரண்டிருந்த அப்பகுதியை சுற்றியுள்ள கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள்அனைவரும் கோபுர தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## கோவை தனியார் கல்லூரி வளாகத்தில் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து 4 தொழிலாளர்கள் உயிரிழப்பு



**கோவை , ஜூலை. 5-**

**கோவை சுகுணாபுரம் அருகே, தனியார் கல்லூரியின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து 4 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார். இச்சம்பவம் தொடர்பாக போலீஸார் விசாரித்து வருகின்றனர்.**

கோவை பாலக்காடு சாலையில் குனியமுத்தூரை அடுத்த கோவைப்புதூர் பிரிவு அருகே தனியார் கல்வி நிறுவன வளாகம் உள்ளது. இங்கு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, கலைக் கல்லூரி ஆகியவை உள்ளன. இதன் மற்றொரு நுழைவுவாயில் பகுதி, சுகுணாபுரம் மலைப்பாதை பகுதியில் உள்ளது. இங்கு பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்த கல்வி நிறுவன வளாகத்தின் ஒரு பகுதியில் மாணவர் தங்கும் விடுதி உள்ளது. இந்த விடுதிக்கு சுற்றுச்சுவர் கிடையாது. சுகுணாபுரம் மலைப்பாதையில் உள்ள கல்லூரியின் நுழைவுவாயிலை கடந்து சிறிது தூரம் தள்ளியுள்ள மேற்கண்ட விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்தப் பணியில் மேற்கு வங்கம் உள்ளிட்ட வடமாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர். கருங்கற்களைக் கொண்டு சுற்றுச்சுவர் கட்டப்பட்டு வந்தது. இன்று நேற்றுமாலை இந்த சுற்றுச்சுவர் கட்டும் பணியில் 5-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

தரைப்பகுதியில் குழியை தோண்டி, அதன் மீது கான்கிரீட் போட்டு, கருங்கற்களைக் கொண்டு தொழிலாளர்கள் சுற்றுச்சுவரை கட்டி வந்தனர். அப்போது சுற்றுச்சுவர் அமைப்பதற்காக கட்டப்பட்ட சுற்றுச்சுவர் அருகே குழி தோண்டியதாக தெரிகிறது. அப்போது லேசான மழையும் பெய்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் அழுத்தம் தாங்காமல் மேற்கண்ட சுற்றுச்சுவர் திடீரென இடிந்து கீழே சரிந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது விழுந்தது.

சுமார் 50 மீட்டர் நீளத்துக்கு 10 அடி உயர சுற்றுச்சுவர் சரிந்து அதன் கற்கள் விழுந்த வேகத்தில் 5 தொழிலாளர்கள் அதற்கு அடியில் சிக்கினர். இதுகுறித்து தகவல் அறிந்த கோவை தெற்கு தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்துக்குச் சென்று கற்களுக்கு அடியில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

நீண்ட போராட்டத்துக்கு பிறகு கற்களுக்கு அடியில் சிக்கியவர்களில் ஒருவர் உயிருடன்மீட்கப்பட்டார். 4பேர் சடலங்களாக மீட்கப்பட்டனர். இச்சம்பவம் குறித்து குனியமுத்தூர் போலீஸார் நடத்திய விசாரணையில் உயிரிழந்தவர்கள் ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த ஜெகநாதன்(53), நாகெல்லா சத்யம்(48), ரபாகா கண்ணையன் (49), மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பிஷ்கோஷ் ஆகியோர் என்பது தெரிய வந்தது. மேலும், காயமடைந்தவர் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பருன்கோஷ் என்பதும் தெரிந்தது.

சுற்றுச்சுவர் விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்த பருன்கோஷ் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு நடைமுறைகளை முறையாக பின்பற்றாமல், சுமார் 10 அடி உயரத்துக்கு சுற்றுச்சுவர் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்ட போது, மேற்கண்ட சம்பவம் நடந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இச்சம்பவம் தொடர்பாக குனியமுத்தூர் போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## ஆலங்குடி அருகே பாதை அமைத்துதர கோரி சாலைமறியல் போராட்டம்



*ஆலங்குடி, ஜீலை.05-*

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் மாங்கோட்டை ஊராட்சிநம்மன்பட்டியில் மாற்றுத்திறனாளி ராமலிங்கம் வீட்டிற்கு செல்லும் பாதையை அமைத்துத் தரக்கோரி இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாவட்ட குழு உறுப்பினர் பி.மணி தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

சாலைமறியலில் ஈடுபட்டவர்களிடம் மாவட்ட காவல் துணைக்கண் காணிப்பாளர் தீபக்ரஜினி, கறம்பக்குடி வட்டாட்சியர் ராமசாமி, ஆலங்குடி காவல் ஆய்வாளர் அழகம்மை ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் சம்பந்தப்பட்ட இடத்தை போராட்ட குழுவோடு பார்வையிட்டு உடனடியாக பாதை அமைத்து தருவது மாற்றுத்திறனாளி ராமலிங்கத்திற்கு வீட்டு மனை பட்டா வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதி கூறியதை அடுத்து போராட்டத்தைகைவிட்டு கலைந்துசென்றனர்.

போராட்டத்தில் மாவட்டச் செயலாளர் ராமச்சந்திரன், மாவட்ட துணைச்செயலாளர் ஆர். சொர்ணகுமார்,செயற்குழு உறுப்பினர்கள் க.அம்பிகாபதி சி.வேலன், எஸ். செல்லப்பா ஆர்.ரமேஷ், பி.எஸ். வெங்கடேசன் சாகுல் ஹமீது ஜெயா காந்தி ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஒப்பந்தத் தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்க மின்வாரிய ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, ஜூலை.5-

தொழிற்சங்கங்களுடன் போடப்பட்ட ஒப்பந்தப்படி ஒப்பந்தத் தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்ய வலியுறுத்தி மின்சார வாரிய ஊழியர்கள் நேற்று புதுக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் புதுக்கோட்டை திட்டத் தலைவர் எஸ். சித்தையன் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி திட்டச் செயலாளர் கு.நடராஜன், சிஐடியு மாவட்டத் தலைவர் க.முகமதலிஜின்னா, பொருளாளர் எஸ். பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பேசினர்,அறந்தாங்கி கோட்டச் செயலாளர் டி.விஜயகுமார் நன்றி கூறினார்.

தொழிற் சங்கங்களுடன் மின்வாரியம் 22.2.2023 அன்று போடப்பட்ட ஒப்பந்தப்படி 6.1.1995 முதல் இன்றுவரை பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு பணிநிரந்தரம் செய்ய வேண்டும். காலியாக உள்ள களை உதவியாளர் பணியிடங்களில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமனம் செய்ய வேண்டும். கே 2 அக்ரிமெண்ட நடைமுறையை ரத்துசெய்து பழைய சிட் அக்ரிமெண்ட முறையைநடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தின் போது எழுப்பப்பட்டன.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









### கூவத்தூர்-முதுகரை சாலையில்

## கல்,மணல்,ஜல்லிகளை வரம்புக்கு மீறி ஏற்றிச்செல்லும் லாரிகள், கண்டு கொள்ளாத வருவாய் துறை மற்றும் காவல்துறை



செய்யூர், ஜுலை-5

செங்கல்பட்டு மாவட்டம்,செய்யூர் வட்டம், இலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் கூவத்தூர் - முதுகரை சாலையில் கனரக வாகனங்கள் அதிக அளவில் செல்கிறது.

அந்த வாகனங்களில் வரம்புக்கு மீறி கல்,மணல் மற்றும் ஜல்லி போன்ற பொருட்களை தினந்தோறும் ஏற்றி செல்கிறார்கள். இதனால் அப்பகுதி வாகன ஓட்டிகள்,பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு பெரும் விபத்துகள் ஏற்பட்டு வருகிறது. மேலும் வாகனங்களில் இருந்து பறக்கும் தூசிகள் வாகன ஓட்டிகள் கண்களில் படுவதால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது .ஆனால் கனரக வாகனங்கள் மீது வருவாய்த்துறை மற்றும் காவல்துறை நடவடிக்கை எடுப்பது கிடையாது.

எனவே இனிவரும் காலங்களில் கனரக வாகனங்களில் வரம்புக்கு மீறி கல்,மணல் மற்றும் ஜல்லிகளை ஏற்றி செல்லும் வாகனங்கள் மீது வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் வரம்புக்கு மீறி ஏற்றி செல்லும் வாகனங்களில் இருந்து கல், மணல் மற்றும் கற்கள் கீழே சிதறினால் ஊராட்சிகளில் உள்ள பொதுமக்களை வைத்து 100 - நாள் வேலை திட்டத்தின் மூலம் சாலைகளை சுத்தம் செய்ய சொல்வதாக கூறப்படுகின்றது.

மேலும் இது மாதிரியான தவறுகள் பின்வரும் காலங்களில் நடந்திடாதபடி இலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் உடனடி கலாய்வு செய்து சம்பந்தப்பட்டகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவிலில் குரு பூர்ணிமாவை முன்னிட்டு 108 விளக்கு பூஜை விழா



ஊத்துக்கோட்டை, ஜுலை5-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு பவானி அம்மன் திருக்கோவில் உள்ளது.இக்கோவிலில் ஆடி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை துவங்கி 11வாரங்கள் சனிக்கிழமை இரவு பக்தர்கள் வந்து இக்கோவிலில் தங்கி இருந்து ஞாயிற்றுக்கிழமை தங்களது நேர்த்திக் கடனை செலுத்தி விட்டு செல்வர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் குரு பூர்ணிமாவை முன்னிட்டு சிறப்பு பூஜை,சிறப்பு வழிபாடு உள்ளிட்டவை நடைபெற்றது. நேற்று முன்தினம் இரவு 108 விளக்கு பூஜை மற்றும் வெள்ளிக் கவசத்தில் உற்சவர் அம்மன் தேரில் பிரகார புறப்பாடு வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், பெரியபாளையம், தண்டலம், ஆரணி, வெங்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவிலின் பரம்பரை அறங்காவலர் அஞ்சன்லோகமித்ரா தலைமையில் கோயிலின் செயல் அலுவலர் பிரகாஷ் மற்றும் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.









மத்திய அரசின் ஸ்வச்சதா பக்வாடா என்ற திட்டத்தின் கீழ் காரைக்கால் மாவட்டத்தில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு ரூபாய் 500 ரூபாய் மதிப்புள்ள 50 முதலுதவி பெட்டகங்களை ஓ.என்.ஜி.சி. காவேரி அஸெட் பங்களிப்பின் மூலம் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் நேற்று வழங்கப்பட்டது. இந்த முதலுதவிப் பெட்டகம் மூலம் தூய்மைப் பணியாளர்கள் தங்களது பணியிடத்தில் ஏற்படும் சிறு காயங்களுக்கு உடனடி முதலுதவி செய்து கொள்ள வசதியாக இருக்கும் என தெரிவித்தார்கள். இந்நிகழ்வில் துணை ஆட்சியர் பேரிடர் மேலாண்மை பாஸ்கரன் துணை இயக்குனர் உள்ளாட்சித்துறை சச்சிதானந்தம் நகராட்சி ஆணையர் செந்தில்நாதன் மற்றும் அனைத்து. கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் மற்றும் ஓ.என்.ஜி.சி.நிர்வாகத்தைச் சேர்ந்த நிர்வாக இயக்குனர் செபஸ்டியன் மற்றும் முதன்மை மேலாளர் விஜயகன்னன் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

## விஜயவாடா—சென்னை புதிய வந்தே பாரத் ரெயில் சேவை 7—ந் தேதி தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி



திருப்பதி, ஜுலை. 5-

விஜயவாடா - சென்னை இடையே புதிய வந்தே பாரத் ரெயில் சேவை வரும் 7-ந் தேதி பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.

ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் இருந்து சென்னைக்கு புதிய வந்தே பாரத் ரெயில் இயக்கப்படுகிறது. இந்த ரெயிலை வருகிற 7-ந் தேதி பிரதமர் மோடி வீடியோ கான்பரன்ஸ் மூலம் தொடங்கி வைக்கிறார். 8-ந் தேதி முதல் பயணிகள் ரெயில்வே டிக்கெட்டை முன்பதிவு செய்து கொள்ளலாம் வந்தே பாரத் ரெயில் விஜயவாடாவில் இருந்து கூடூர், ரேணிகுண்டா, வழியாக சென்னைக்கு வந்து அடைகிறது. இதே மார்க்கத்தில் சென்னையில் இருந்து விஜயவாடாவுக்கு வந்தே பாரத் ரெயில் இயக்கப்பட உள்ளது.

விஜயவாடாவில் இருந்து புறப்படும் வந்தே பாரத் ரெயில் சுமார் 6 மணி நேரம் 30 நிமிடத்தில் சென்னையை வந்தடையும். முக்கிய 2 நகரங்களுக்கு இடையே இந்த ரெயில் இயக்கப்படுவதால் பயணிகள் இடையே மிகுந்த வரவேற்பு பெற்று உள்ளது. வழியில் இந்த ரெயில் நிறுத்தம் குறித்த அறிவிப்பு எதுவும் வெளிவரவில்லை. திருப்பதிக்கு தரிசனத்திற்கு வரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு ரேணிகுண்டா ரெயில் நிலையத்தில் வந்தே பாரத் ரெயில் நின்று செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என விஜயவாடா கோட்ட ரெயில்வே அதிகாரிகள் தெற்கு மத்திய ரெயில்வே அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்து உள்ளனர். ஆந்திராவில் ஏற்கனவே விசாகப்பட்டினத்தில் இருந்து செகந்திராபாத்திற்கும், செகந்திராபாத்தில் இருந்து திருப்பதிக்கு என 2 வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்படுகிறது. தற்போது விஜயவாடாவில் இருந்து சென்னைக்கு 3-வது வந்தே பாரத் ரெயில் இயக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிக ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தியை விவசாயம் செய்ய வேண்டும் கடைமடை பகுதி விவசாய சங்கத் தலைவர் கோரிக்கை



காரைக்கால்,ஜுலை,5

காரைக்கால் மாவட்ட கடைமடை பகுதி விவசாய சங்கத் தலைவர் டி என் சுரேஷ் அரசுக்கு கோரிக்கையை முன் வைத்துள்ளார், அதில் அவர் கூறியிருப்பதாவது, புதுச்சேரி அரசு,காரைக்கால் மாவட்டத்தில் உள்ள கேவிகே (பண்ணை அறிவியல் மையம்) விவசாய வளர்ச்சிக்கு மத்திய அரசு அறிவித்து வரும் திட்டங்களை காரைக்காலில் செயல்படுத்தி வருகிறது.

அந்தவகையில் காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு அடுத்து செல்லூர் கிராமத்தில் மத்திய அரசு மாற்றுப்பயிர் திட்டத்தில் கேவிகே விவசாயிகளுக்கு சூரிய காந்தி பயிர் செய்யும் முறை குறித்து முதல்வர் ஜெய்சங்கர் திட்ட ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் ஒருநாள் பயிற்சி முகாம் நடத்தி, சூரிய காந்தி விதையும் கொடுத்தனர். இதனைத் தெடர்ந்து செல்லூர் வருவாய் கிராமத்தில் ஒரு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டுள்ள, சூரிய காந்தி விதை தற்போது நன்றாக வளர்ந்து, அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

சூரிய காந்தி விதையை நல்ல விலைக்கு விற்க முடியும். ஆனால் சிறிய அளவில் மட்டுமே பயிர் செய்யப்பட்டுள்ளதால் இதை வாங்குவதற்கு வியாபாரிகள் முன்வர மாட்டார்கள். எனவே வரும் ஆண்டுகளில் அதிக ஏக்கர் பரப்பளவில் சூரியகாந்தியை விவசாயம் செய்ய கேவிகேவும், புதுச்சேரி அரசும், காரைக்கால் மாவட்டமும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.மாற்றுப்பயிராக சூரியகாந்தி நன்றாக விளைச்சலை தருவதால் விவசாயிகளும் சூரிய காந்தியை பயிர் செய்ய முன்வர வேண்டும். கோடைக்கால பயிருக்கு அனைத்து விவசாயிகளுக்கும் சூரிய காந்தி விதையை வழங்க வேண்டும். அதுபோல் சூரியகாந்தி விதையை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து தர வேண்டும். நெல்லுக்கு ஊக்கத்தெகை வழங்குதைப்போல் சூரியகாந்தி உள்ளிட்ட மாற்றுப்பயிர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்.



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பறையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்கு சரிபார்க்கும் இயந்திரங்கள் ஆகியவைகளின் முதல்நிலை சரிபார்ப்பு பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், துவக்கி வைத்தார்.

## திருவொற்றியூரில் கோவில் வாசலில் யாசகம் எடுத்த பணத்தை பிரிப்பதில் தகராறு: ஒருவருக்கு கத்தி குத்து



திருவெற்றியூர், ஜுலை, 5

சென்னை திருவெற்றியூர் தியாகராஜ சுவாமி வடிவுடையம்மன் கோவில் வாசலில் யாசகம் எடுத்து வருபவர்கள் காத்தவராயன், மற்றும் ரவி இவர்கள் இருவரும் யாசகம் எடுத்த 20 ரூபாய் பணத்தை பிரிப்பதில் தகராறு ஏற்பட்டு சண்டை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த ரவி யாசகம் எடுக்கும் நண்பன் சரவணனை அழைத்து வந்து காத்தவராயனிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார் அப்போது கையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து கோவில் வாசலில் யாசகம் எடுத்து கொண்டு இருந்த 60 வயதுடைய முதியவர் பழனியை இடது காலில் குத்தி விட்டு தப்பி ஓட்டம் பிடித்தனர்.

இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார்க்கு தகவல் கொடுத்தனர் உடனடியாக 108 ஆம்புலன்ஸ் தொடர்பு கொண்டு முதியவர் பழனியை மீட்டு அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார் வழக்கு பதிவுசெய்து ரவி சரவணன் இருவரையும் தேடி வருகின்றனர்

## தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில், கனமழை பெய்யும் என, எச்சரிக்கப்பட்டுள்ளது

சென்னை-ஜுலை5

சென்னை வானிலை ஆய்வுமையம்வெளியிட்ட செய்திக்குறிப்பு: இன்று: நீலகிரி, கோவை மற்றும் தேனி மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும். திருப்பூர், திண்டுக்கல், தென்காசி,திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் மதுரை மாவட்டங்களில் கனமழை பெய்யும்.

இன்று நீலகிரி, கோவை மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும். திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்யும்.

ஜுலை 6: நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழை பெய்யும். சென்னையில் வானம் மேகமூட்டமாக காணப்படும்; நகரின் சில பகுதிகளில் மிதமான மழை பெய்யும். அதிகபட்சம் 36 டிகிரிசெல்ஷியஸ் வெப்பநிலை பதிவாகும்.

தமிழக தெற்கு கடலோரம், மன்னார் வளைகுடா மற்றும் அதையொட்டிய குமரி கடல், இலங்கை கடலோரம், தமிழக வடக்கு கடலோரம் உள்ளிட்ட பகுதிகளில், மணிக்கு65கி.மீ.,வேகத்தில் சூறாவளி காற்று வீசுகிறது. லட்சத்தீவுகள், கேரள கடலோரம் மற்றும் அதையொட்டிய தென் கிழக்கு அரபிக்கடல், கர்நாடக கடலோர பகுதிகளிலும், மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளிலும், மணிக்கு 55 கி.மீ., வேகத்தில் சூறாவளி காற்று வீசுகிறது.

எனவே, மீனவர்கள் இன்றும், நாளையும் மேற்கண்ட வங்கக்கடல் மற்றும் அரபிக்கடல் பகுதிகளுக்குள் செல்ல வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### கீழடி ஆய்வறிக்கையை உடனடியாக வெளியிடுமாறு

## இந்திய அரசை வற்புறுத்த முதல்வர் முன்வரவேண்டும் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்



சென்னை, ஜுலை,5

“உலகளவில் தமிழரின் பண்பாட்டுத் தொன்மையை உலகறியக் கொண்டு செல்வோம்” என முதல்வர் மு. க. ஸ்டாலின் அமெரிக்கா வாழ் தமிழர்களின் மாநாட்டிற்கு அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டிருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

மேலும், கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழ்நாட்டில் நகர்ப்புற நாகரிகமும் நிலவியது என்பதையும், எழுத்தறிவு மற்றும் படிப்பறிவு மேம்பட்ட சமுதாயமாகத் தமிழர்கள் விளங்கினார்கள் என்பதை கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியிருப்பதை தனது செய்தியில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த வேளையில் முதலமைச்சர் கவனத்திற்கு கீழடி ஆய்வு பற்றிய ஒரு முக்கியமான செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

2013-2014 ஆம் ஆண்டுகளில் இந்திய அரசின் தொல்லாய்வுத் துறையின் அதிகாரியான முனைவர் அமர்நாத் இராமகிருட்டிணா தலைமையில் வைகை ஆற்றின் இரு கரைகள் நெடுகிலும் ஆய்வு நடத்தப்பட்டு 293 தொல்லாய்வுச் சுவடுகள் கண்டறியப்பட்டன. இவற்றில் மதுரை மாநகருக்கு மிக அருகில் உள்ள கீழடி என்ற இடத்தைத்தேர்ந்தெடுத்து முதலில் தொல்லாய்வு நடத்தப்பட்டது. இதன்மூலம் நகர்ப்புற நாகரிகம் ஒன்று புதைந்து கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தமிழ், பிராமி எழுத்துப் பொறிப்புகளும் கண்டறியப்பட்டன. இதன்மூலம் கீழடி நாகரிகம் ஒரு நகர்ப்புற நாகரிகமே என்பதும், இதன் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டு என்பதும் கரிம ஆய்வுமூலம் நிலைநாட்டப்பட்டது.

இந்த அரிய கண்டுபிடிப்பிற்காக அமர்நாத் இராமகிருட்டிணா அவர்களைப் பாராட்டி ஊக்குவிப்பதற்குப் பதில் அவர் உடனடியாக தொலைதூர அசாம் மாநிலத்திற்கு மாற்றப்பட்டார். பிறகு பல்வேறு இடங்களுக்கும் மாற்றப்பட்டு அலைக்கழிக்கப்பட்டார். ஆனாலும் தனது தொல்லாய்வில் கண்டறிந்த வரலாற்று உண்மைகளை அறிக்கையாக அளிக்கும் கடமையிலிருந்து அவர் தவறவில்லை. பெரும்பாடுபட்டுத் தனது விரிவான அறிக்கையினை இந்திய அரசின் தொல்லாய்வுத்துறைக்கு இந்த ஆண்டின் தொடக்கத்தில் அளித்துவிட்டதாகத் தெரிகிறது. ஆனால், அந்த அறிக்கையை இதுவரை வெளியிடப்படவில்லை என்பது அதிர்ச்சியை அளிக்கிறது.

“2004-2005 ஆம் ஆண்டில் ஆதிச்சநல்லூர் அகழாய்வில் 160க்கு மேற்பட்ட முதுமக்கள் தாழிகளும், முழுமையான மனித எலும்புக்கூடு ஒன்றும் வேறு ஏராளமான பொருட்களும் கண்டறியப்பட்டன. முழு மனித எலும்புக்கூடு உட்பட அத்தனையும் மைசூரில் உள்ள இந்திய அரசின் ஆய்வகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றை ஆராய்ந்த முடிவுகள் 19 ஆண்டுகள் கழிந்த பிறகும் இன்னமும் வெளியிடப்படவில்லை” என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அதே கதி கீழடி ஆய்வறிக்கைக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது. கீழடி ஆய்வு உள்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து ஊக்குவித்து வரும் முதல்வர் ஸ்டாலின் கீழடி ஆய்வறிக்கையை உடனடியாக வெளியிடுமாறு இந்திய அரசை வற்புறுத்த வேண்டுகிறேன். என பழ. நெடுமாறன்) தெரிவித்துள்ளார்.

# சந்திரபாடி கிராமத்திற்கு அரசு பேருந்து துவக்கம் பேருந்து ஓட்டி சென்ற எம்எல்ஏ மக்கள் ஆரவாரம்





தரங்கம்பாடி, ஜூலை, 05-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா சந்திரபாடி ஊராட்சியில் கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக பேருந்து வசதி இல்லாமல் மீனவ மக்கள், பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் பெரும் அவதி அடைந்து வந்தனர். சந்திரபாடி மீனவ கிராமத்திற்கு அரசு பேருந்து இயக்க பல ஆண்டுகளாக மீனவர்கள் பொதுமக்கள் மாணவர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

மேலும் மீனவ பஞ்சாயத்தார் பேருந்து இயக்க கோரிக்கை வைத்திருந்த நிலையில் கோரிக்கையை ஏற்ற பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளர் நிவேதா எம்.முருகன் சந்திரபாடி மீனவ கிராமத்திற்கு முதல் முறையாக அரசு பேருந்து சேவை குடியரசுத்து துவக்கி வைத்து பேசினார். நிகழ்ச்சியில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில் நுட்ப அணி பொறுப்பாளர் பி எம் ஸ்ரீதர், மாவட்ட திமுகதுணை செயலாளர் மு. ஞானவேலன், ஒன்றிய செயலாளர் எம். அப்துல்மாலிக், அமுர்தா.விஜயகுமார், தரங்கை பேரூர் திமுக செயலாளர் முத்துராஜா, போக்குவரத்து கழக அதிகாரிகள் நாகை மண்டல பொது மேலாளர் ராமமூர்த்தி கும்பகோணம் கோட்ட பொது மேலாளர் இளங்கோவன், ஊராட்சி மன்ற தலைவர் பரிமளா ராஜ்குமார், மீனவ பஞ்சாயத்தாரர்கள், ஊராட்சி பிரதிநிதிகள், பள்ளி மாணவர்கள் திமுக நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

மேலும் நிகழ்ச்சிகள் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் அரசு பேருந்தை சந்திரபாடி மீனவகிராமத்தில்இருந்து பொறையார் பேருந்து நிலையம் வரை ஓட்டி சென்றார் அவருக்கு மீனவர்கள் பொதுமக்கள் ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்தினர் ஏராளமானோர் பேருந்தில் பயணம் செய்தனர்.



ஸ்ரீமத் மூத்த வீர சுவாமி சோபகிருது வருடம் ஆணி பௌர்ணமி முதலாம் ஆண்டு அலங்கார ஊஞ்சல் திருவிழா சென்னை புது வண்ணாரப்பேட்டை ஜீவா நகர் பகுதியில் நடைபெற்றது. சிவன் நகர் பகுதியில் உள்ள அருள்மிகு முத்து மாரியம்மன் ஆலயத்தில் மதுரைவீர் சாமி அலங்காரம் செய்யப்பட்டு உடுக்கை பம்பை வாத்தியங்கள் முழங்க முக்கிய வீதிகளில் வளம் வந்து பின்னர் அலங்கார ஊஞ்சலில் கத்தியின் மேல் நின்றும் உட்கார்ந்தும் ஆடி ஊஞ்சலில் இருந்த எலுமிச்சை பழம் கீழே விழுந்தை பொதுமக்கள் எடுத்து சென்றனர். இதில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்து அருள் வாக்கு கேட்டனர்.

# தஞ்சாவூர் பாரத் கல்வியியல் கல்லூரியில் நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி




கந்தர்வக்கோட்டை, ஜூலை.5-

தஞ்சை புதிய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள பாரத் கல்வியியல் கல்லூரி மாணவ, மாணவிகள் நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வுபேரணியை கல்லூரி வளாகத்தில் உள்ள கணேசனார் அரங்கத்தில்விழிப்புணர்வு உறுதிமொழியுடன் தொடங்கி, ரகுமான் நகர் வழியாக மருத்துவ கல்லூரி சாலை வரை நடந்து சென்றனர்.

பேரணியை பாரத் கல்வியியல் கல்லூரி முதல்வர் சுபத்ரா தொடங்கி வைத்தார், அதனை தொடர்ந்து பேராசிரியர்கள் செந்தாமரை, ராஜலெட்சுமி, லெட்சுமி, சுரேஷ்குமார், மாதவன், இளையராஜா, தீபா ஆகியோர் வழிநடத்தி சென்றனர். நாட்டுநலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தமிழ்ச்செல்வன் அனைவருக்கும் நன்றி கூற விழா இனிதே முடிவுற்றது.

# திருப்போரூர் அருகே காப்பகத்தில் பெண்களுக்கு பாலியல் தொல்லை– உரிமையாளர் கைது

திருப்போரூர், ஜூலை,5

திருப்போரூர் அருகே பனங்காட்டுப்பாக்கம் பகுதியில் அன்பகம் என்ற பெயரில் காப்பகம் நடத்தி வருபவர் வீரமணி. இங்கு மன வளர்ச்சி குன்றியோர், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சுமார் 50-க்கும் மேற்பட்டோர் தங்கி உள்ளனர்.

இந்த காப்பகத்தில் தங்கி இருந்த பெண் ஒருவருக்கு காப்பக உரிமையாளர் வீரமணி பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து அப்பெண் சமூக வலைத்தளம்ஒன்றில்பதிவு செய்தார். இந்த பதிவின் அடிப்படையில் தாம்பரம் கோட்டாட்சியர் செல்வகுமார் மற்றும் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

அந்த புகாரில் உண்மை தன்மை இருப்பது உறுதியானது. இதையடுத்து இது தொடர்பாக அதிகாரிகள் செங்கல்பட்டு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சாய் பிரனீத்துக்கு தகவல் தெரிவித்தனர். அவரது உத்தரவுப்படி போலீசார் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் காப்பகத்தில் மேலும் அதிரடி விசாரணை நடத்தினர். இதில் காப்பகத்தில் தங்கி உள்ள மன வளர்ச்சி குன்றிய பெண்களிடம், வீரமணி பாலியல் தொல்லையில் ஈடுபட்டது உறுதியானது.

இதைத்தொடர்ந்து வீரமணியை போலீசார் நேற்று காலை அதிரடியாக கைது செய்தனர். அவரிடம் டி.எஸ்.பி.ஜெகதீஸ்வரன், திருப்போரூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் ஆகியோர் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த காப்பகத்தில் இருந்தவர்களை வேறு காப்பகத்துக்கு இடமாற்றம் செய்தனர்.

இந்த நிலையில் பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளான காப்பகத்தை போலீஸ் சூப்பிரண்டு சாய் பிரனீத், மாவட்ட கலெக்டர் ராகுல்நாத் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இதற்கிடையே அரசு புறம்போக்கு நிலத்தில் செயல்பட்டு வந்ததால் காப்பகத்திற்கு சீல் வைக்க உத்தரவிடப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது.




காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரியில் அமைந்துள்ள வ. உ. சி. அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று காலை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் ஆசிரியப் பெருமக்கள் பள்ளி மாணவ மாணவிகள் நெகிழிப் பையின் தீமைகள் குறித்தும் அதை இனி பயன்படுத்த மாட்டேன் என்றும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். மேலும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் துணிப்பையை வழங்கிய ஆட்சியர் பிளாஸ்டிக் பைகளை நீங்கள் எப்போதும் பயன்படுத்தக்கூடாது என்றும் உங்கள் தாய் தந்தையரிடம் உங்கள் சகோதர சகோதரிகளிடமும் மற்றும் உங்கள் நண்பர்களிடமும் சென்று இதன் தீமைகள் குறித்து விளக்கி கூறுங்கள் என்றும் ஆட்சியர் கேட்டு கொண்டார். இந்நிகழ்வில் துணை ஆட்சியர் பாஸ்கரன் பள்ளி துணை முதல்வர் கனகராஜ் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் உடன் இருந்தார்கள்.

# அரியலூர் மாவட்டம் காடுவெட்டி கிராமத்தில் பாமக ஆலோசனைக் கூட்டம்

அரியலூர், ஜூலை.5-

காடுவெட்டி கிராமத்தில், பாட்டாளி மக்கள் கட்சி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், காடுவெட்டி கிராமத்தில் நடைபெற்ற, பாட்டாளி மக்கள் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்திற்கு, கட்சியின் மாவட்டச் செயலாளர் மற்றும் ஜெயங்கொண்டம் யூனியன் சேர்மேன் காடுவெட்டி ரவிசங்கர் தலைமை வகித்தார், பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் வைத்தி என்கிற வைத்தியலிங்கம் முன்னிலை வகித்தார், வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் கீழப்பழுவூர் தர்ம பிரகாஷ் வரவேற்று பேசினார்.

தமிழக அரசு, சோழர் பாசன திட்டத்தை அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்த, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, அரியலூர் மாவட்டத்தில் 5 லட்சம் பொதுமக்களிடம் நடைபெற உள்ள, கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைப்பதற்காக, ஜூலை மாதம் 13ம் தேதி, கங்கைகொண்ட சோழபுரம் அருகே பொன்னேரிபகுதிமற்றும் ஜெயங்கொண்டம், அரியலூர் நகரங்களுக்கு வருகை தரும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், மாநிலங்களவை உறுப்பினர் அன்புமணி ராமதாஸுக்கு, சிறப்பான வரவேற்பு அளிப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்டத் தலைவர் சின்னதுரை, கட்சி நிர்வாகிகள் எம். கே. ராஜேந்திரன், கே.பி.ஆர்.ராமதாஸ், செந்தில்குமார், அரியலூர் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் அசோகன், ஒன்றியச் செயலாளர் அரியலூர் தெற்கு செம்மலை, திருமானூர் வடக்கு வினோத், அரியலூர் கோகுல், விஜயகுமார், அரியலூர் வடக்கு ஒன்றிய நிர்வாகி கல்லமேடு பெரியசாமி, ஜெயங்கொண்டம் நகர செயலாளர் பரசுராமன், வக்கீல் திருமாவளவன் மற்றும் பாமக, வன்னியர் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளின் நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர், பாமக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும், காடுவெட்டி கிராமத்தில் உள்ள, ஜெ.குரு நினைவு மணி மண்டபத்துக்கு சென்று அஞ்சலி செலுத்தினர், முடிவில் காடுவெட்டி கிளை செயலாளர் சின்னப்பிள்ளை நன்றி கூறினார்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை பகுதியில் பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு விளையாட்டு மைதானத்தின் கட்டுமான பணிகளை மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உடன் உள்ளார்.

# ஜெயங்கொண்டம் நகரில் பல்வேறு வளர்ச்சி பணிகள் எம்.எல்.ஏ கண்ணன் தொடங்கி வைத்தார்



அரியலூர், ஜூலை.5-

ஜெயங்கொண்டம் நகரில் பல்வேறு வளர்ச்சி பணிகளை, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் தொடங்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ஜெயங்கொண்டம் நகராட்சியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு (2022 - 2023) திட்டத்தின் கீழ், ஜெயங்கொண்டம்நகராட்சி, சிதம்பரம் சாலையில் அமைந்துள்ள நியாய விலை கடைக்கு, ரூபாய் 12.30 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாயவிலை கடை கட்டிடம் கட்டும் பணி, 2 - வது வார்டு ஆதிதிராவிடர் காலணி வடக்குத்தெருவில், ரூபாய் 13.37 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி, குஞ்சிதபாதபுரம் தெருவில் ரூபாய் 7.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டும் பணி, வார்டு எண். 21 மோழியன் தெருவில், ரூபாய் 7.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டும் பணி, ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஜெயங்கொண்டம் நகர் மன்றத் தலைவர் சுமதி சிவகுமார், நகர் மன்றத் துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி, நகராட்சி ஆணையர் குமார், நகராட்சி பொறியாளர் ராஜகோபாலன், நகராட்சி பணி மேற்பார்வையாளர் பூபதி, நகர் மன்ற உறுப்பினர்கள் சுந்தராபாய் ராபர்ட், ருக்ஷணா பேகம் இதயதுல்லா, மங்கை புகழேந்தி, அம்பிகாபதி, சுதாகர், நகர துணை செயலாளர் ரமேஷ் மற்றும் நகர, வார்டு திமுக மற்றும் விசிக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# ஜூன் மாதத்துக்கான 9.19 டிஎம்சி தண்ணீரை கர்நாடகம் முழுமையாக தரவில்லை

## அமைச்சர் துரைமுருகன் குற்றச்சாட்டு



சென்னை, ஜூலை.5-

காவிரியிலிருந்து தமிழகத்துக்கு ஜூன் மாதம் தர வேண்டிய 9.19 டிஎம்சி தண்ணீரை முழுமையாக கர்நாடக அரசு வழங்கவில்லை என்று தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை கோட்டூர்புரத்தில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது காவிரி நதிநீர் பங்கீடு மற்றும் மேகேதாட்டு விவகாரம் குறித்து கர்நாடக மாநில துணை முதல்வர் சிவக்குமார் பேச்சு குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர் கூறியது: "உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, கர்நாடகம் தமிழகத்துக்கு சேர வேண்டிய தண்ணீரை ஜூன் மாதத்தில் வழங்கவில்லை. ஜூன் மாதத்தில், நமக்கு 9.19 டிஎம்சி தண்ணீர் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், வந்தது 2.833 டிஎம்சி தண்ணீர் மட்டும்தான். எனவே குறைவு எவ்வளவு என்று பார்த்தால் 6.357 டிஎம்சி.

காவிரி நதிநீர் பங்கீட்டு ஆணையம் கர்நாடகத்துக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்துக்கு தரவேண்டிய தண்ணீரை வழங்க வேண்டும் என்று கேட்கிறோம். கர்நாடக தரப்பு காரணங்களை அவர்கள் கூறுகின்றனர். நமது தரப்பு காரணங்களை நான் கூறுகிறேன்.

மேகேதாட்டு அணை விவகாரம் குறித்து பேசக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மத்திய ஜல்சக்தி துறை அமைச்சரும் அது தொடர்பாக பேசக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளார். கர்நாடக துணை முதல்வர் இந்த விவகாரம் குறித்து பேசட்டும், அதுபற்றி கவலையில்லை. நாங்கள் எங்களது தரப்பு காரண காரியங்களை சொல்வோம்" என்று அவர் கூறினார்.

# மின் வேலிகள் அமைக்க முன் அனுமதி பெறுவது கட்டாயம் தமிழக வனத்துறையின் புதிய விதிகள்


சென்னை, ஜூலை.5-

சூரியசக்தி மின் வேலிகள் உள்ளிட்ட மின் வேலிகள் அமைக்க முன் அனுமதி பெறுவது கட்டாயமாகிறது. ஏற்கெனவே அமைக்கப்பட்ட மின் வேலிகளை பதிவு செய்வதும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது என்று சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு அரசு வன விலங்குகளை மின் விபத்திலிருந்து பாதுகாப்பதற்கு மின்வேலிகள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. வன விலங்குகளைப் பாதுகாப்பதில், தமிழக அரசு அதீத ஈடுபாடு காட்டி வருகிறது. இந்நிலையில், உயர் மின்னழுத்த மின் வேலிகளால், மின்விபத்து ஏற்பட்டு, வன விலங்குகள் குறிப்பாக, யானைகள் மின்சாரம் தாக்கி உயிரிழக்கும் நிகழ்வுகள் ஏற்படுகின்றன.

எனவே, வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கு, மின் வேலிகளை அமைப்பதற்கான தரப்படுத்தப்பட்ட அளவுகோலுடன் கூடிய விதிமுறைகளை நிர்ணயிப்பது இன்றியமையாதது ஆகிவிட்டது. அதேவேளையில், காடுகளை ஒட்டியுள்ள பகுதிகளில், வன விலங்குகளால் சேதமடையும் விவசாய விளைபொருட்களைப் பாதுகாப்பதன் மூலம் விவசாயிகளின் நலனைப் பேணுதலும் முற்றிலும் அவசியமாகிறது. விவசாயிகள் தங்கள் பயிரை பாதுகாப்பதற்கு தரப்படுத்தப்பட்ட கீழ்க்கண்ட விதிமுறைகள் உதவும்.

முதல் முயற்சியாக, தமிழக அரசு தமிழ்நாடு மின்வேலிகள் (பதிவு மற்றும் ஒழுங்குமுறை) விதிகள் 2023-னை அறிவித்து அரசிதழில் (03.07.2023) அறிவிக்கை செய்துள்ளது. இது சூரியசக்தி மின்வேலிகள் உள்ளிட்ட மின்வேலிகள் அமைப்பதையும், விவசாய நிலங்களைச் சுற்றி ஏற்கெனவே அமைக்கப்பட்ட மின்வேலிகளைப் பதிவு செய்வதையும், தரப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் வழிவகுக்கும். அரசு அறிவிக்கை செய்துள்ள விதிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:



சூரியசக்தி மின் வேலிகள் உள்ளிட்ட மின் வேலிகள் அமைக்க முன் அனுமதி பெறுவது கட்டாயமாகிறது. ஏற்கனவே அமைக்கப்பட்ட மின் வேலிகளை பதிவு செய்வதும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது. இந்த விதிகள், தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட காப்புக்காடுகளிலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள விவசாய நிலங்களுக்கு மட்டுமே பொருந்தும். மின் வேலிகளை அமைக்கும் வணிகத்தில் உள்ள அனைத்து நிறுவன மின்வேலிகளும், இவ்விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள BIS தரநிலைகளான BIS-302-2-76 (இந்தியா) விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும். அறிவிக்கை செய்யப்பட்ட, காப்புக்காட்டின் வனப் பகுதியிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவுக்குள் ஏற்கெனவே மின்வேலிகளை அமைத்திருப்பவர்கள், தங்கள் வேலிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலரிடம் பதிவு செய்வது இனி கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் வனத்துறை அலுவலர்கள் கொண்ட ஒரு கூட்டுக் குழு, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறைகள ஆய்வு செய்து, பதிவுப் புத்தகத்தில் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்ட வன அலுவலர், மின்வேலி அமைக்கப்பட உள்ள இடத்தை ஆய்வு செய்து சரிபார்த்த பிறகு, மின்வாரியத்துறை அதிகாரிகளுடன் விவரக்குறிப்புகளை சரிபார்த்து உரிய ஆய்விற்கு பிறகு ஒப்புதல், குறைப்பு அல்லது நிராகரித்து, விண்ணப்பத்தின் மீது 45 நாட்களுக்குள் முடிவெடுக்க வேண்டும். இந்த விதிகள் வெளியிடப்பட்ட தேதியில் ஏற்கெனவே மின் வேலிகள் அமைத்துள்ள நில உரிமையாளர், இந்த விதிகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து, அறுபது நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழைப் பெறுவதற்கு, மாவட்ட வன அலுவலரிடம் விண்ணப்பிக்க வேண்டும். அனுமதி கிடைத்தவுடன், சொத்தின் உரிமையாளர் அனுமதி பெற்ற நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் மின் வேலியை அமைத்து, உறுதிமொழியுடன் மின்வேலியை பதிவு செய்ய விண்ணப்பிக்க வேண்டும். வனத்துறை மற்றும் மின்சாரத்துறை அதிகாரிகள் குழுவின் கூட்டு ஆய்வுக்குப் பிறகு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்பட்டுள்ள மின்வேலிகளின் தரம் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை ஆஞ்சநேயர் திருக்கோயிலில் அனுமன் திருச்சபை சார்பில் கல்வி விருது வழங்கும் விழா



புதுக்கோட்டை, ஜூலை.5-

புதுக்கோட்டை ஆஞ்சநேயர் திருக்கோயிலில் அனுமன் திருச்சபை சார்பில் மாணவ,மாணவிகளுக்கு கல்வி விருது வழங்கும் விழா நடைபெற்றது. புதுக்கோட்டை தெற்கு 4 -ஆம் வீதி பெரிய மார்கெட் சந்திப்பிலுள்ள இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் அனுமன் திருச்சபை சார்பில் அரசு பொது தேர்வில் சிறப்பாக மதிப்பெண் பெற்ற 10 -ஆம் வகுப்பு, பிளஸ் -2 மாணவ மாணவிகளுக்கான கல்வி விருது வழங்கும்விழா நடைபெற்றது.அரசு பொது தேர்வு ஏழுதிய 10 -ஆம் வகுப்பு, பிளஸ் 2 மாணவ மாணவிகளுக்கான கல்வி வழிபாடு ஸ்ரீ லெட்சுமி ஹயக்ரவர் கல்வி சங்கல்ப பூஜையில் கலந்து கொண்டு தேர்வில் சிறப்பாக மதிப்பெண் பெறுகின்றவர்களுக்கு அனுமன் திருச்சபையினர் விருதுகள் தொடர்ந்து 11 ஆண்டுகளாக கல்வி விருது வழங்கப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, நடைபெற்ற விருது வழங்கும் விழாவுக்கு திருக்கோகர்ணம் அரசு பள்ளி தலைமை ஆசிரியர் லதா கந்தசாமிதலைமை வகித்தார். ஆஞ்சநேயர் திருக்கோயிலில் கே.மணி குருக்கள் அனைவரையும் வரவேற்றார். கவிஞர் நிலவை பழனியப்பன்,முன்னிலை வகித்தார், புதுக்கோட்டை வட்டார கல்வி அலுவலர் கே.ஜி .பிரியா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 10 -ஆம் வகுப்பு,பிளஸ்-2 தேர்வுகளில் சிறந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கும் ,மாவட்ட அளவில் சிறந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கும் கல்வி விருது வழங்கி வாழ்த்திப் பேசினார்.

நிகழ்வில் ஜெ.ஜெ கல்லூரி பேராசிரியர் அனிதா ராணி திருக்கோகர்ணம் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சினிவாசன், மன்னர் கல்லூரி பேராசிரியர் நாகேஸ்வரன், பல்வேறு பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் கல்வியாளர்கள் சமூகஆர்வலர்கள்,மேப்டைலர் வீரையா நகர்மன்ற உறுப்பினர் கார்த்திக் மெஸ் மூர்த்தி, கவிதா மெட்டல்முருகேசன், லெட்சுமணன் உள்ளிட்டோர், மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர், விழா ஏற்பாடுகளை, அனுமன் திருச்சபை நிர்வாகிகள் வெகு சிறப்பாக செய்தனர், ஆன்மிக நெறியாளர் ஆனந்தன் நன்றி கூறினார்.

# அரியலூர் அருகே கல்லமேடு கிராமத்தில் தீமிதி திருவிழா



அரியலூர், ஜூலை.5-

அரியலூர் அருகே கல்லமேடு கிராமத்தில் தீமிதி திருவிழா நடைபெற்றது.

அரியலூர் அருகே, ஒட்டக்கோவில் ஊராட்சிக்கு உட்பட்ட, கல்லமேடு கிராமத்தில் உள்ள திரௌபதி அம்மன் கோவிலுக்கு, தொடர்ந்து 18 நாட்கள் மகாபாரதம் படிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து,நிறைவு நாளான்று மாலை, அங்குள்ள திறந்தவெளி மைதானத்தில் உருவாக்கப்பட்ட அக்னி குழியில், காப்புகட்டியபக்தர்கள் பலரும், தீமிதி திருவிழாவில் கலந்து கொண்டனர். பக்தி சிரத்தையுடன் நடைபெற்ற தீமிதி திருவிழாவில், கோயில் அறங்காவலர், கிராம நாட்டாமைகள், ஏராளமான பெண்கள் உள்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டையில் ரேஷன் அரிசி கடத்திய நான்கு பேர் கைது 500 கிலோ ரேஷன் அரிசியுடன் வாகனத்தை பறிமுதல் செய்து போலீசார்

கந்தர்வகோட்டை, ஜூலை.5-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் ரேஷன் அரிசி கடத்திய நான்கு பேர் கைது 500 கிலோ ரேஷன் அரிசியுடன் வாகனத்தை பறிமுதல் செய்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோ ட்டை பகுதியில் ரேஷன் அரிசி கடத்தப்பட்டு வருவதாக கந்தர்வகோட்டை காவல்துறைக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.



தகவலின் பெயரில் கந்தர்வகோட்டை காவல் ஆய்வாளர் செந்தில்மாறன் கந்தர்வகோட்டை - பட்டுக்கோட்டை சாலையில் மட்டங்கால் கருப்புகோயில் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, அந்த வழியாக வந்த மினி வேனை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் ரேஷன் அரிசி 500 கிலோ இருந்துள்ளது. வாகனத்தில் வந்த மட்டங்கால் கிராமத்தைச் சேர்ந்த மதியழகன் மகன் செல்வம் ( 21), அதே கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் ராஜ்மோகன் (34), அரிஹரன் (20), விரடிப்பட்டியைச் சேர்ந்த சண்முகம் மகன் சிவகுமார் (45) ஆகியோருடன் வேனையும் பறிமுதல் செய்து நால்வரையும் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

# கந்தர்வகோட்டையில் நடு ரோட்டில் லாரி தீப்பிடித்து எரிந்தது . தீயணைப்பு வீரர்கள் போராடி அணைத்தனர்

கந்தர்வகோட்டை, ஜூலை.5-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே புதுக்கோட்டையில் இருந்து திருவையாரை நோக்கி ஜல்லி ஏற்றி சென்ற லாரி திடீரென தீப்பிடித்துக் கொண்டது.ஓட்டுநர் பிரசாத்தின் சாமர்த்தியத்தால் ஊரில் ஒதுக்குப்புறமாக லாரியை நிறுத்திவிட்டு



தீயணைப்பு துறையினருக்கும் காவல்துறையினருக்கும் தகவல் அளித்தார்.

தகவல் கிடைந்த உடன் விரைந்து வந்த தீயணைப்பு துறையினர் தண்ணீரை பீச்சி அடித்து எரிந்த லாரியின் இருந்து தீயை அணைத்தனர், இதனால் பெரும் சேதாரம் தடுக்கபட்டது. முன்நின்று செயல்பட்ட காவல்துறைக்கும், தீயணைப்பு துறைக்கும் இப்பகுதி மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

# கந்தர்வகோட்டை ரோட்டரி சங்கம் சார்பில் தையல் இயந்திரம் வழங்கும் விழா



கந்தர்வகோட்டை, ஜூலை. 5-

கந்தர்வகோட்டை ரோட்டரி சங்கம் சார்பில் ஏழை தையல் கலைஞர்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது

கந்தர்வகோட்டை பேருந்து நிலையத்தில் நடைபெற்ற விழாவிற்கு ரோட்டரி சங்கத் தலைவர் கே.ராஜ்மோகன் தலைமை வகித்தார், ரோட்டரி சங்கச் செயலாளர் எஸ். பிரசாத், பொருளாளர் கே. ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், பேருந்து நிலைய பகுதியில் செருப்பு, புத்தக பைகள் உள்ளிட்டவைகள் தைத்து வரும் சாந்தி ஐயப்பன் என்பவருக்கு தைப்பதற்கான தையல் இயந்திர கருவியை வழங்கி அவரதுபணியை பாராட்டி கௌரவித்தனர், நிகழ்ச்சியில் ரோட்டரி சங்கத்தின் இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் பிளாஸ்டிக் பை பயன்பாட்டுக்கு தடை விதிக்க வேண்டும் உயர் நீதிமன்றம்

மதுரை, ஜூலை. 5-

கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் பிளாஸ்டிக் பை பயன்பாட்டுக்கு தடை விதிக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் மேலமணக்குடியைச் சேர்ந்த ஸ்டெர்லின், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: 'கன்னியாகுமரி சிறப்பு நிலை பேரூராட்சியில் கன்னியாகுமரி கடற்கரை காந்தி மண்டபம் முதல் கோவளம் கிராம நிர்வாக அலுவலகம் வரை தேசிய நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும் பாதசாரிகள் நடந்து செல்ல சிமெண்ட் மற்றும் கற்களால் ஆன நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. இந்த நடைபாதையை ஆக்கிரமித்து பலர் கடை வைத்துள்ளனர்.

நடைபாதை ஆக்கிரமிப்பால் சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை



சந்திக்கின்றனர். சுற்றுலா பயணிகளால் கடற்கரையின் இயற்கை அழகை ரசிக்க முடியவில்லை. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி அதிகாரிகளிடம் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, கன்னியாகுமரி காந்தி மண்டபம் முதல் கோவளம் கிராம நிர்வாக அலுவலகம் வரை தேசிய நெடுஞ்சாலையின் இருபுறங்களில் நடைபாதையை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்ற உத்தரவிட வேண்டும்” என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.வைத்தியநாதன், பரத சக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் வாதிடுகையில், ''புதிய வணிக வளாகம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்து புதிய கட்டிடம் கட்டும் வரை, தற்காலிகமாக 168 கடைகளுக்கு மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்கியுள்ளார்” என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், ''மாவட்ட ஆட்சியரால் அனுமதி வழங்கப்பட்ட 168 கடைகளுக்கு பேரூராட்சி நிர்வாகம் அடையாள அட்டை வழங்க வேண்டும், அனுமதி வழங்கப்படாத கடைகளை உடனடியாக அகற்ற வேண்டும். கன்னியாகுமாரி கடற்கரை பகுதியில் பிளாஸ்டிக் பை பயன்பாட்டை தடை செய்து, கன்னியாகுமரி கடற்கரை பகுதியை தூய்மையாக வைத்திருப்பதை பேரூராட்சி நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்” என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.



▶ மதுரைக்கல்லூரி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள சுவாமி விவேகானந்தரின் நினைவு தினத்தை முன்னிட்டு, பள்ளிச் செயலர் வழக்கறிஞர் பார்த்தசாரதி தலைமை ஆசிரியர் ரவி, ஆகியோரது தலைமையில் ஜே.சி.ஐ ரத்திஸ் பாபு முன்னிலையில், சிறப்புரை நேதாஜி சுவாமிநாதன், வாழ்த்துறையாக பசுமை இயக்கம் ராஜசேகர், வைரமணி செல்வம் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு மரியாதை செய்தனர், நேதாஜி தேசிய இயக்கம் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.

# தென்காசி மாவட்டம் சிவகிரியில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்

தென்காசி, ஜூலை. 5-

தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூர் கழக திமுக சார்பாக தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் காந்தி கலையரங்கத்தில் நடைபெற்றது.



தலைமை பொன் முத்தையா பாண்டியன், வாசுதேவநல்லூர் ஒன்றிய திமுக செயலாளர், ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர், வரவேற்புரை எஸ். எஸ். செண்பக விநாயகம் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர், சிவகிரி பேரூர் கழகச் செயலாளர், முன்னிலை வே.மனோகரன் மாவட்ட திமுக துணை செயலாளர், கே. டி. சி. குருசாமி ராயகிரி பேரூர் திமுக செயலாளர், எம். பி. கே. மருதப்பன் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர், கோமதி சங்கரி சுந்தரவடிவேலு சிவகிரி பேரூராட்சி மன்றத் தலைவர், சிவகிரி பேரூர் திமுக நிர்வாகிகள் துரைராஜ், முனியாண்டி, முத்தையா, ராமுத்தாய், பரமசிவன், மாரி துரை, கந்தவேல், தொகுப்புரை சுந்தர வடிவேலு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர், வி.கே.மருது பாண்டியன் கூட்டுறவு சங்கத் தலைவர் சிவகிரி, புல்லட் ஆர். கணேசன் வழக்கறிஞர் அணி மாவட்ட துணைச் செயலாளர், சிறப்புரை ஆர். எஸ். பாரதி கழக அமைப்புச் செயலாளர், ராஜா ஈஸ்வரன் தென்காசி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சூர்யா வெற்றிகொண்டான் தலைமைக் கழக வழக்கறிஞர், தலைமை கழக பேச்சாளர், தனுஷ் எம்.குமார் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர், யு. எஸ். டி. சீனிவாசன் தலைமை செயற்குழு உறுப்பினர், விஜயா பாண்டியன் வாசு ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர், கூட்டுறவு சங்கத் தலைவர், ச.தங்கவேலு, ப.ஆ.சரவணன், எஸ். முத்துச்செல்வி மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர், எஸ். பரமகுரு,எஸ்.பத்மநாதன், பொதுக்குழுஉறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், எஸ். எம். சாகுல் ஹமீது, ஒன்றிய கழக, நகரக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள்,கோ. பூஜை பாண்டியன், லாலா சங்கர பாண்டியன், கடற்கரை, சேர்மத்துரை, கே. வி.பெரியதுரை, வெற்றி விஜயன்,எ. அந்தோணிசாமி, மு. பிரகாஷ், ரூபி பாலசுப்பிரமணியம், கா.நாகூர் கனி மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர், விஜயா சௌந்தரபாண்டியன் நகர் மன்றத் தலைவி புளியங்குடி, ஆயில் ராஜா பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கரடு, முரடான சாலையில் சிரமத்துடன் பயணிக்கும் கிருஷ்ணகிரி மாவட்ட மலைக் கிராம மக்கள்

கிருஷ்ணகிரி, ஜூலை. 5-

சாமல்பள்ளத்தில் இருந்து உலகம் செல்லும் சாலையில் உள்ள அஞ்சலம் கிராமம் வரையான சாலையில் ஜல்லிகற்கள் பெயர்ந்து உள்ளதால், தினமும் சிரமத்துடன் கிராம மக்கள் சென்று வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிருஷ்ணகிரி - ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது சாமல்பள்ளம் கிராமம். சாமல்பள்ளத்தில் இருந்து உலகம் கிராமம் வரை செல்ல கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு தார் சாலை அமைக்கப்பட்டது. இதன் இடைப்பட்ட தூரம் சுமார் 7 கி.மீ தூரம். இச்சாலையில் இம்மிடிநாயக்கனப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட இம்மிடிநயக்கனப்பள்ளி, சினகானப்பள்ளி, கரகூர், ராமாபுரம், புலியரசி, ஓசஹள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட கூட்டூர், கீழ் மொரசுப்பட்டி, மேல்மொரசுப்பட்டி, செந்தூரான் கொட்டாய் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் 20-க்கும் அதிகமான கிராமங்கள் உள்ளன.

இக்கிராமங்களில் வசிக்கும் மக்கள் பெரும்பாலும் விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர். குறிப்பாக காய்கறிகள், மலர்கள் அதிகளவில் சாகுபடி செய்து, சூளகிரி, ராயக்கோட்டை சந்தைகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர். இச்சாலையில் நாள்தோறும் விவசாயிகள், பள்ளி,



கல்லூரிகளுக்கு செல்லும் மாணவ, மாணவிகள், பணிக்கு செல்வோர் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இருசக்கர வாகனங்களில் சென்று வருகின்றனர்.

இப்பகுதி மக்களுக்கு போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்த இச்சாலை, சாமல்பள்ளம் தொடக்கத்தில் இருந்து அஞ்சலம் கிராமம் வரை முற்றிலும் சேதமாகி உள்ளது. இதனால் நாள்தோறும் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துடன் சென்று வருவதாக கூறுகின்றனர்.

இது குறித்து சினகானப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த தேவராஜ் மற்றும் சிலர் கூறும்போது, தார் சாலையில் பல்வேறு இடங்களில் சேதமாகி, ஜல்லிகள் பெயர்ந்த நிலையிலும், குண்டும், குழியுமாகவும், ஒரு சில இடங்களில் மண் சாலையாக மாறி உள்ளது. இதனால் நாள்தோறும் மிகுந்த அவஸ்தையுடன் இச்சாலையில் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது. இச்சாலையில் இயக்கப்படும் இருசக்கர வாகனம் முதல் டிராக்டர், சரக்கு வாகனங்கள் அடிக்கடி பழுதாகி நிற்கிறது.

இதேபோல், கூலி வேலைக்கு செல்பவர்கள் மாலையில் சோர்வுடன், இச்சாலையில் வீடு திரும்பும் போது மேலும், பாதிப்பு ஏற்படுகிறது. குறிப்பாக, மழைக்காலங்களில் சாலை சேறும், சகதியுமாகி, போக்குவரத்திற்கு பயனற்றதாக மாறிவிடுகிறது. இவ்வழித்தடத்தில் காலை, மாலை வேளையில் மட்டும் இயக்கப்படும் அரசு நகர பேருந்து ஓட்டுநர் சிரமத்துடன் இயக்க வேண்டிய நிலை உள்ளது.

இச்சாலையை சீரமைக்க பலமுறை கோரிக்கை விடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, விவசாயிகள், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளின் நலன் கருதி, இச்சாலையை உடனடியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மாவட்ட ஆட்சியர் இச்சாலையை நேரில் ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# “சிவசேனாவுடன் கூட்டணி சாத்தியம் எனில், பாஜகவுடன் என்ன தயக்கம்?” – என்சிபி பிளவும், பிரபுல் படேல் கேள்வியும்

மும்பை, ஜூலை. 5-

"சிவசேனாவுடன் கூட்டணி சாத்தியமென்றால், பாஜகவுடன் ஏற்படுத்த ஏன் தயக்கம்?" என்று பிரபுல் படேல் கேள்வி எழுப்பியுள்ளார். மராத்தி செய்தி சேனலுக்கு அவர் அளித்தப் பிரத்யேகப் பேட்டியில் தேசியவாத காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட பிளவின் பிண்ணனி தொடங்கிதற்போதைய சூழல் வரை பல விஷயங்களையும் வெளிப்படையாகப் பேசியுள்ளார். மேலும், தனது பேச்சைத் தொடர்ந்து சரத் பவார் தன் மீது கொள்ளும் உணர்வு எதுவாக இருந்தாலும், அதை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மகாராஷ்டிராவில் ஆளும் பாஜக - சிவசேனா கூட்டணியில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவரான அஜித் பவார் இணைந்தார். அவர் துணை முதல்வராகவும், அவருடன் மேலும் 8 பேர் அமைச்சர்களாகவும் பதவியேற்றுக் கொண்டனர். தேசியவாத காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு, அம்மாநில அரசுக்கு மட்டுமல்லாமல் 2024 மக்களவைத் தேர்தலுக்குத் தயாராகும் எதிர்க்கட்சிகள் அனைத்துக்குமே ஒருவித அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக கணிக்கப்படுகிறது.

இந்நிலையில், அஜித் பவாருக்கு ஆதரவு தெரிவித்துள்ள பிரபுல் படேல் அளித்த பேட்டி ஒன்று தற்போது கவனம் பெற்றுள்ளது. அதில் அவர், “தேசியவாத காங்கிரஸ் கட்சியால் சிவசேனாவுடன் கூட்டணியை ஏற்படுத்த முடிகிறது என்றால், பாஜகவுடன் கூட்டணி அமைப்பதில் மட்டும் ஏன் தயக்கம் ஏற்பட வேண்டும்? உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் இணைந்த மாகா விகாஸ் அகாதி கூட்டணி 2022-ல் சரிந்தபோதே தேசியவாத காங்கிரஸ் கட்சியின் 53 எம்எல்ஏ.க்களில் 51 பேர் சரத் பவாரிடம் பாஜக கூட்டணியை பரிசீலிக்குமாறு கூறினார்கள்.

கடந்த ஆண்டு கட்சிக்குள் எம்எல்ஏக்கள் மத்தியில் இது தொடர்பான ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், முடிவு ஏதும் எட்டப்படவில்லை. அந்த முடிவுக்கு இப்போது ஒரு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை நிச்சயமாக அஜித் பவாரின் தனிப்பட்ட முடிவு, எனது தனிப்பட்ட முடிவு என்றெல்லாம் சொல்வதைவிட, கட்சியினர் சேர்ந்து எடுத்த முடிவு என்று சொல்லலாம்.

முதன்முதலில் பாஜகவுடன் இணைவது பற்றி குரல் எழுப்பியவர் ஜெயந்த் பட்டீல். அவர்தான் அந்த 51



பேரில் முதன்மையானவர். அனில் தேஷ்முக், நவாப் மாலிக் மட்டுமே அந்த ஆலோசனைக் கூட்டத்தில் இணையவில்லை. அதனைத் தொடர்ந்து எம் எல் ஏ.க்கள் சரத் பவாருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் தேசியவாத காங்கிரஸ் கட்சி ஆட்சி அதிகாரத்துக்கு வெளியில் நிற்கக் கூடாது. அதனால், அரசுடன் இணைவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தனர்.

கட்சித் தலைமை அதற்கு செவி சாய்க்கவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் மட்டுமே இருக்கலாம். ஒன்று இறுதி முடிவை அவர்கள் எட்டாமல் இருந்திருக்கலாம். இல்லாவிட்டால் அவர்களுக்கு எங்களின் தேவை இல்லாமல் இருந்திருக்கலாம்.

கட்சித் தலைவர் சரத் பவாருக்கு நெருக்கமானவராக நான் அறியப்பட்டாலும் கூட, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அவர் திடீரென ராஜினாமா முடிவை அறிவிக்கும் வரை எனக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

எனது முடிவால் சரத் பவார் நிச்சயம் அதிருப்தியடைந்திருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். அதையுமீறி அவர் என் மீது என்னவிதமான உணர்வைக் கடத்தினாலும் அதை நான் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறேன். கட்சியில் இருந்து நீக்கப்பட்டது குறித்து நான் கருத்து ஏதும் தெரிவிக்க விரும்பவில்லை.

இந்தச் சூழலில் சட்டப்பேரவை சபாநாயகரிடம் ஜெயந்த் பட்டீல் அஜித் பவார் உள்பட 9 எம்எல்ஏ.க்கள் தகுதி நீக்கம் பற்றி மனு கொடுத்துள்ளார். கட்சியில் சமீபகாலமாக தேர்தலே நடைபெறவில்லை. அதனால் கட்சிக்கு மாநிலத் தலைமைப் பொறுப்பில் யாரும் இல்லை. எனவே, ஜெயந்த் பட்டீலின் கோரிக்கையே எடுபடாது. மத்திய அமைச்சரவையில் இனியும் நீடிப்பது குறித்து இனிமேல் தான் முடிவு செய்ய வேண்டும் என்று கூறினார்.

இதனிடையே, அஜித் பவாரின் செயலினைத் தொடர்ந்து, கட்சியின் மூத்த தலைவரும் மாநிலங்களை உறுப்பினருமான பிரபுல் படேல் மற்றும் சுனில் தாக்ரே எம் உள்ளிட்ட ஐந்து தலைவர்கள் தேசியவாத கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். அதேபோல், அஜித் பவார் உள்ளிட்ட ஏக்நாத் ஷிண்டேவின் அமைச்சரவையில் பதவி ஏற்றுக்கொண்ட 8 பேர் மீதும் தகுதி நீக்க நடவடிக்கையில் கட்சி ஈடுபட்டது.

இதற்கு பதிலடியாக, அஜித் பவார் அணி, என்சிபி மாநிலத் தலைவர் ஜெயந்த் பாடீலை நீக்கி உத்தரவிட்டது. அதேபோல், ஜெயந்த் பாடீல் மற்றும் ஜிதேந்ர அவ்ஹாத் ஆகியோரை அவை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்க பரிந்துரைத்துள்ளது.

மாநிலத்தின் துணை முதல்வராக பதவியேற்ற பின்னர், அஜித் பவார் தலைமை செயலகம் அருகில் புதிய என்சிபி அலுவலகம் திறக்க உள்ளார். தற்போதைய கட்சி அலுவலகம் மும்பையின் கிழக்கு பல்லார்ட்டில் உள்ளது. அஜித் பவார் அணி தாங்களே உண்மையான தேசியவாத காங்கிரஸ் என்றும்,வேறு அந்த அணியும் இல்லை என்றும் கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இன்று இரண்டு அணிகளும் மும்பையில் தனித்தனியாக கூட்டம் நடத்தவுள்ளன. தேசியவாத காங்கிரஸ் கட்சியின் பிளவுக்கு பின்னர் நடக்கும் முதல் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு அணிகளும் பெரும்பான்மையான எம்எல்ஏக்களின் ஆதரவினை கோரியுள்ளது.

இதனிடையே, "மகாராஷ்டிராவில் தேசியவாத கட்சியின் அஜித் பவாரின் கிளர்ச்சியால் அக்கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது போன்ற நிலை பிஹாரிலும் நடக்கலாம்" என்று சுஷில் குமார் மோடி கணித்துள்ளார்.


PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# செந்தில் பாலாஜி வழக்கில் நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பு 3வது நீதிபதிக்கு மாற்றம்

# கோவையில் தனியார் கல்லூரி சுற்றுச்சுவர் இடிந்து 4 தொழிலாளர்கள் பலி





# தமிழக பல்கலைக்கழகங்களின் நிலை ஆளுநர் ரவி அதிருப்தி


| சென்னை / புதுக்கோட்டை | 05.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

அ. கி. பரந்தாமனார் , தமிழக எழுத்தாளர், கவிஞர், சொற்பொழிவாளர் (பி.1902) (இ.1986)



கே. கருணாகரன் , கேரளத்தின் 7வது முதலமைச்சர் (பி.1918) (இ.2010)



இராம் விலாசு பாசுவான் , இந்திய அரசியல்வாதி (பி.1946) (இ.2020)



## இன்றைய நினைவு நாள்

வல்லிபுரம் வசந்தன் , விடுதலைப் புலிகளின் முதல் கரும்புலி (பி.1966) (இ.1987)



வைக்கம் முகமது பசீர் , மலையாள எழுத்தாளர் (பி.1908) (இ.1994)



திருநல்லூர் கருணாகரன் , இந்தியக் கவிஞர் (பி.1924) (இ.2006)



## கரும்புலிகள் நாள் (தமிழீழம்)